**அ.வ.எண். 88/2023**
**பி.வா.சா.1 : பெரப்பகோனார்**
**தேதி : .02.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>மற்ற பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

இல்லை.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாவா ஏ செட்யூல் சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்துக்கள். தாவா பி செட்யூல் சொத்துக்கள் அனைத்தும் ஏ செட்யூல் சொத்துக்களிலிருந்து வந்த வருமானத்திலிந்து வந்து கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். நீங்கள் கூலி வேலை செய்து உங்கள் சகோதரர், சகோதரர்களை காப்பாற்றியுள்ளீர்கள் என்று தவறாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. இளைய சகோதரி வள்ளியம்மாள் என்பவருக்கு நானும், பழனிச்சாமி, ரகுநாதன் ஆகிய மூவரும் சேர்ந்து தான் திருமணம் செய்து வைத்தோம். தாவா பி செட்யூல் சொத்துக்களை தனிப்பட்ட முறையில் உங்கள் சகோதரருடன் சேர்ந்து வாங்கியிருந்தாலும் அந்த சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்தின் வருமானத்திலிருந்து வாங்கியதால் உங்களது தனிப்பட்ட சொத்தாக கருத முடியாது என் று சொன்னால் சரியல்ல. உங்கள் உடன்பிறந்த சகோதரிக்கு பங்கு இல்லை என்று நீங்கள் கூறியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 3 பகுதிகளாக பிரிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 5 பகுதிகளாகத்தான் பிரிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN
Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.09 17:48:20 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.